NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

# கணக்கு மிகுதி பரிமாற்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. கணக்கு மிகுதி பரிமாற்ற வசதியானது (BT திட்டம்) நெஷனல் டிவலெப்மென்ட் வங்கியினால் வழங்கப்படுமொன்றாவதுடன் இதனகத்துப்பின்னர் “அட்டைதாரர்கள்” எனக்குறிப்பிடப்படும் பெருநிறுவன கடனட்டைகள் தவிர்ந்த பிளாடினம், சிக்னேச்சர் மற்றும் இன்பினைட் NDB முதன்மை கடனட்டைதாரர்களுக்கு பிரத்தியேகமாக கிடைக்கப்பெறும்.

2. “BT திட்டத்திற்கு” விண்ணப்பிக்கின்றபோது கடனட்டையில் காணப்படுகின்ற மிகுதிக்கு உட்பட்டு, அட்டைதாரர்கள் குறைந்தபட்ச வெளிநிற்கும் மிகுதியாக இ.ரூ.50,000/- மற்றும் அதிகூடிய பரிமாற்றத் தொகையாக அனுமதிக்கப்பட்ட கடன் எல்லையின் 80□ இனை பரிமாற்ற உரித்துடையவர்களாவார்கள்.

3. ஒவ்வொரு பரிவரத்தனைக்குமான பின்வரும் செயன்முறைப்படுத்தல் கட்டணத்துடன் அட்டைதாரர்கள் 60 மாதங்களில் மீளசெலுத்தலாம்.

| காலப்பகுதி | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | 48 மாதங்கள் | 60 மாதங்கள் |
|---|---|---|---|---|
| மாதமொன்றுக்கான செயன்முறைப்படுத்தல் கட்டணம் | 0% | 0.50% | 0.70 % | 0.70 % |
| வினைத்திறன் வீதம் (AER) | 0% | 11.13% | 15.01% | 14.76% |
| கட்டமைப்பு கட்டணம் (இ.ரூ) | 5,000 | 5,000 | 5,000 | 5,000 |

4. வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக, விண்ணப்பதாரர் முறையாக பூரணப்படுத்தப்பட்ட BT விண்ணப்பப்படிவத்தை வேறு வங்கிக் கடனட்டைக்கூற்று களுடன் contact@ndbbank.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது அருகிலுள்ள NDB கிளையில் கையளிக்கவும்.

5. NDB வங்கியானது அதனது வங்கிக்குள்ளான வங்கியின் மதிப்பாய்வு செயல்முறையில் எந்தவொரு BT விண்ணப்பப்படிவத்தினையும் ஏற்க அல்லது மறுப்பதற்கான தற்றுணிபைக் கொண்டுள்ளது.

6. 5 ஆம் சரத்திற்கு மேலதிகமாக, அட்டைதாரரின் கடன் வரம்புப் பிரகாரம் “BT திட்ட” தொகையை தீர்மானித்து அனுமதிப்பதற்கான உரிமையை NDB வங்கி கொண்டுள்ளது.

7. NDB வங்கி அனுமதிக்கப்பட்ட BT திட்டத் தொகையினை 3 வேலை நாட்களுக்குள் CEFT பரிமாற்ற வடிவில் தொடர்புடைய வேறு வங்கி கடனட்டைக்கு பரிமாற்றும்.

8. BT திட்டத்தின் முன்கூட்டிய முழுத் தீர்வு கட்டணம் (BT திட்டத்தின் மீதமுள்ள தொகைக்கு 4□) தீர்ப்பனவுக் கட்டணத்திற்கு உட்பட்டதாகும்.

9. அட்டை கணக்கின் மீதான கடன் எல்லையானது BT திட்டத் தொகையின் எல்லை வரையில் முடக்கப்படும் என்பதுடன் தொடரும் மாதங்களில் மாதாந்த தவணைகள் விலைச்சிட்டையிடப்பட்டு செலுத்தப்படும் வேளையில் விடுவிக்கப்படும்.

10. குறிப்பிட்ட மாதத்திற்கான NDB கடனட்டையின் வருமதித் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக தீர்க்கப்படாத BT திட்டத் தவணையை மொத்த வெளிநிற்கும் கூற்று உள்ளடக்குகின்ற சந்தர்ப்பத்தில், கடனட்டை வெளிநிற்றலின்மீது செல்லுபடியாகும் நியம வட்டி வீதமானது நியம கடனட்டையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க அறவிடப்படும்.

11. கடனட்டைதாரரின் கொடுப்பனவுகள் தவணைதவறுகின்ற சந்தர்ப்பத்தில், BT வெளிநிற்றல்களை முன்னதாகவே நிறுத்துவதற்கும் மற்றும் ஒட்டுமொத்த நிலுவைத் தொகையையும் கடனட்டை கணக்கில் பற்றுவைக்கவும் ஹேுடீ வங்கி உரிமைகொண்டுள்ளது.

12. அட்டைதாரரின் வேறு வங்கி கடனட்டையின் வருமதித் திகதிக்கு முன்னதாக கொடுப்பனவை மேற்கொள்வதிலான NDB வங்கியின் தவறுகை அல்லது தாமதத்தின் விளைவாக அட்டைதாரருக்கு உறக்கூடிய ஏதேனும் கொடுப்பனவு தாமதத்தின் காரணமாக, வட்டி, அல்லது வேறு வங்கி கடனட்டை வெளிநிற்றல்களுக்கான ஏதேனும் மிகைக்கொடுப்பனவு, ஏதேனும் மிகைக்கடன் கட்டணங்கள், தாமதமான கொடுப்பனவு கட்டணங்கள், நிதிசார் அறிவீடுகள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட வேறு வங்கி கடனட்டையின் ஏதேனும் வேறு கட்டணங்கள்/பொறுப்புகளின் வடிவில் உறப்படக்கூடிய அனைத்து மற்றும் ஏதேனும் இழப்புக்களுக்கு NDB பொறுப்பாகாது என்பதுடன் எதிரிடப்படுதலும் வேண்டும்.

13. இச்சலுகையின் நியதிகள் கடனட்டை உடன்படிக்கைக்கு மேலதிகமானதாக காணப்படும் என்பதுடன் அதனில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளை தரமிழக்கச்செய்வதாக காணப்படுதலாகாது. இச்சலுகையானது தெரிவுசெய்யப்பட்ட அட்டைதாரர்களுக்கான விசேட வசதியொன்றாகும் என்பதுடன் இதன் உள்ளடக்கங்கள் எதுவும் அட்டைதாரர் உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பங்கமுறுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.